1970 மார்ச் 10]

திரு. பி. எஸ். தனுஷ்கோடி: ஆகவே, வாடகை இல்லாமல் சொந்தக் கட்டிடத்திலேயே இயங்க அங்கங்கே விவசாயக் கிடங்கு களுக்கான கட்டிடத்தைக்கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: எல்லா வற்றுக்கும் நிரந்தரமான சொந்தக் கட்டடம் கட்ட இப்போது ஏற்பாடு இல்லை.

திரு. சோ. அழகர்சாமி: விவசாயிகள் விவசாய கிடங்கு களுக்குப் போகிறபோது பிற்பகல்—உணவு நேரம் என்று கிடங்குப் பணியாளர்கள் அதைப் பூட்டிக்கொண்டு போகிற நிலை இருக்கிறது. அப்படியின்றி ஷிப்ட் முறையில் தொடர்ந்து காலை முதல் மாலை வரை இயங்க விவசாயக் கிடங்குகளின் பணியாளர்களை அதிகப் படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அப்படிப் பட்ட புகார்கள் விவசாயிகள் மத்தியில் இருந்து வந்ததாகத் தெரிய வில்லை. எனினும் அரசாங்கம் இதுபற்றி பரிசீலிக்கும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: அமைச்சர் அவர்கள் பதில் சொல் லும் போது லாப நோக்கத்தோடு மட்டும் இவை செயல்படவில்லை என்று சொன்னார்கள். நாம் இப்போதே 6 கோடிக்கு வரிகளை உயர்த்தியிருக்கிறோம். இவற்றினால் நஷ்டம் ஏற்படாத அளவுக் காவது பார்த்துக்கொள்ள முயற்சி எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அதிக நஷ்டம் வந்தால் கிடங்குகளை மூடத்தான் வேண்டும். நஷ்டம் வராது பார்க்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

Sheep breeding unit at Ootacamund

* 297 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) whether the sheep breeding unit at Ootacamund has been closed; and

(b) if so, the reasons for this step?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை, ஐயா.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: நீலகிரியில் வளர்க்கப்படுகிற ஆடுகளின் தரம் நம்முடைய விவசாயிகளைக் கவர்வதாக இருப்பத னால் மீண்டும் அதை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நீலகிரியில் வளர்க்கப்படு கிற ஆடுகள் குறைந்து வருகிறதென்றுதான் அரசாங்கம் அவற்றை தீவிரப்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: About eight sheep breeding centres are closed in Hosur taluk. Government have constructed a number of buildings. Since these centres are closed, the buildings are in a ruinous condition. Hosur has got a congenial climate and facilities for sheep breeding. Under the circumstances will the Hon. Minister think of reviving the closed sheep centres?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படி ஒன்றும் இப்போது யோசனை இல்லை.

முட்டைப்பொடி தயாரிப்பு

*298 வினா—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முட்டைப் பொடி (Egg Powder) செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் தமிழக அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

கைத்தறி துணிக்கு விற்பனைக்கழிவு வீதத்தில் உயர்வு

*299 வினா— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீபாவளி, பொங்கல் போன்ற விசேஷ நாட்களில் கதர்த் துணிக்கு தரப்படுகின்ற அளவுக்குக் கைத்தறி துணிக்கும் விற்பனை கழிவு (ரிபேட்) உயர்த்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, கதரைவிட கைத்தறியில் அதிகமான தொழிலாளர்கள் ஈடுபடுகிற காரணத்தினால், அவர்கள் மீது கருணை காட்டி இவர்களுக்கும் அதிகமான ரிபேட் வழங்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கதருக்கென்று ஒரு வாரியம் தனியாக இருக்கிறது. மத்திய அரசாங்கம் அதற்கென்று தனித் திட்டம் வகுத்திருக்கிறார்கள். கைத்தறிக்கு அது அனுமதிக்கப்படுவதில்லை.

திரு. சி. வீரமணி: தீபாவளி சமயத்தில், பொங்கல் சமயத்தில் கதர் கைத்தறிகளுக்கு ரிபேட் கொடுப்பதுபோல--கையினால் செய்யப்படக்கூடிய மிதி அடிகளுக்கும், அவை இயந்திரத்தினால் செய்